[5th September 1958

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி ஒரு தொழில் கான்பரன்ஸ் கூட்டி அதில் வெளிநாட்டுக்கு நமது கைத்தறித் துணிகளை அனுப்பு வதற்கு ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அவ் விதம் துணிகளை அனுப்பும்போது கார்ப்பரேஷனுக்கு வெளியே உள்ள துணிகளையும் அனுப்ப முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : **Counting the chickens before they are hatched** என்று சொல்வார்கள். இதைப்பற்றியுள்ள யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. கார்ப்பரேஷன் அமைத்த பிறகு இதைப்பற்றி யோசனை செய்யலாம்.

Textile industry

* 67 *Q*.—SRI N. K. PALANISAMI AND SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a conference on 18th April 1958 to discuss various matters relating to the crisis in textile industry in Madras State;

(*b*) what the main points discussed at the conference are;

(*c*) whether any decisions have been taken; and

(*d*) whether they have been implemented?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*), (*c*) & (*d*) Yes, Sir; an informal exchange of views with the representatives of the mills, representatives of labour and representatives of handloom industry was held on 18th April 1958. All aspects of the textile industry were discussed and suitable steps have been taken to mitigate the present difficulties of the different sectors of the industry. It is not in the public interest to disclose more details of the discussions of the conference at this stage.

SRI N. K. PALANISAMI: இந்த மகாநாட்டில் 'ப்ரொடக்ஷன் ஸ்டாட்டஸ்கோ மெயின்டைன்', பண்ணவேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட தாக தெரிகிறது. அதன்பின் அது ஒப்புக்கொள்ளப்பட்டபிறகு கனம் மந்திரி அவர்கள் மதுரைக்கு சென்று ஹார்வி மில்லில் கொடுக்கப்பட்டு வரும் டியர்னஸ் அலவன்ஸில் 25 பர்ஸெண்டு குறைக்கவேண்டும் என்று சொல்லுவது முறையாகுமா? இப்போது பல இடங்களிலும் ஷிப்டுகள் எல்லாம் குறைக்கப்பட்டும், பல இடங்களில் மில்கள் மூடப்பட்டும் வருகின்றன. இந்த சமயத்தில், இதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் பல கேள்விகள் இருக்கின்றன. முதலாவதாக வெளிநாட்டுக்கு நூல் ஏற்று மதி செய்ய அனுமதித்தால் நெருக்கடி தீரும் என்று மில் முதலாளிகள் சார்பில் கூறப்பட்டது. அந்த யோசனையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு தெளிவு காண்கின்ற வரையிலும் மில்களை மூடக்கூடாது, அப்போது உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கும் என்று சொல் லப்பட்டது. இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்டவட்டமாக அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே அந்த கூட்டத்தில் இதைப்பற்றி திட்டவட்டமாக எடுக்கப்பட்ட முடிவு என்று இதை சொல்வதற்கில்லை.